# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவராண்டு 2014
ஆவணி 28
ஜூலை 13
ஞாயிறு (13-9-1981)
நிறுவியது 1947
புத்தகம் 35
இதழ் 27
☎ 8164
விலை: ரூபா 1.50


இலங்கைத் தமிழர் பிரச்சினை;

# உள்நாட்டுப் பிரச்சினையல்ல உலக பிரச்சினையாகிவிட்டது

## தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். அறிவிப்பு



"இலங்கைத்தமிழர் பிரச்சினை என்பது இப்போதுஅந்நாட்டின் உள்நாட்டு விவகாரமல்ல அது உலகப் பிரச்சினையாக இன்று உருவெடுத்து விட்டது."

இவ்வாறு தமிழ் நாட்டு முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்,ஜி. இராமச்சந்திரன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

அண்மையில் சிறீலங்கா அரசின் தூதுவராக தமிழ்

—8ம்- பக்கம் பார்க்க

## படுகொலைக்குள்ளான தனபதியின் பரிதாபத் தோற்றம்



கொலை செய்யப்பட்ட தனபதியின் பூதவுடலை மேலே காண்கிறீர்கள். தனபதியின் பூதவுடலுக்கு தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். சந்தனமாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். அத்துடன் தமிழக அரசின் சார்பில் ரூபா 25000 அக்குடும்பத்துக்கு வழங்கினர், திமுக சார்பில் கழகச் செயலாளர் சாதிக் பாட்சாவும் ரூபா 3000 வழங்கினர். 6 மாதப் பெண் குழந்தையொன்று உட்பட 4 பிள்ளைகளையும் மனைவியையும் தவிக்க விட்டுச் சென்றுள்ள தனபதியின் குடும்பத்துக்குநட்ட ஈடு வழங்குமாறு சிறீலங்கா அரசிடம் இந்திய அரசு கோரியுள்ளது.

## செப்டம்பர் பதினைந்தில் கலைஞர் களத்தில் குதிக்கிறார்!



இலங்கைத் தமிழர்களின் கண்ணீரைத்துடைத்துஅவர்களுக்கு வாழ்வழிக்கும்படி இந்திய அரசைத் தூண்டுவதற்காக திராவிட முன்னேற்றக்கழகம் தொடர்ச்சியாக சென்னையிலுள்ள சிறீலங்கா துணைத் தூதரகத்தின்முன் நடத்திவரும்போராட்டத்தின்இறுதிநாளான செப்டம்பர் பதினைந்தாம் நாள் தடையைமீறி நடைபெறவிருக்கும்ஊர்வலத்துக்கும் மறியல் போராட்டத்துக்கும். திமுக தலைவரும் தமிழ்நாடுசட்டமன்றஎதிர்க்கட்சித்தலைவருமான கலைஞர் கருணாநிதி அவர்கள் தாமே தலைமைதாங்கிகளத்தில்குதிக்கப்போவதாகஅறிவித்துள்ளார்-

திமுகதலைமைக்கழகவழக்கறிஞர் திரு-டி.பி. இராதாகிருஷ்ணன் தலைமையில் 6 வது நாளாக 9.9-81 புதன் கிழமைநடைபெற்ற மறியற்போராட்டத்தில் 25 திமுக தொண்டர்கள்கைது செய்யப்பட்டனர்-

### பத்திரிகைத் தணிக்கை

அவசரகாலச் சட்டத்தின் கீழ் 21.8.81 பிற்பகலிலிருந்து பத்திரிகைத் தணிக்கையை அரசாங்கம் அமுலுக்குகொண்டுவந்துள்ளது.

## சனிக்கிழமை ஹர்த்தால்

இலங்கைத் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதைக் கண்டித்தும் ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தும் தமிழக அரசும், அனைத்து அரசியற் கட்சிகளும் ஏற்பாடு செய்துள்ள முழுநாள்ஹர்த்தால் 12-9-81 சனிக்கிழமைதமிழ்நாடுமுழுவதும் நடைபெறுகிறது.

இந்த ஹர்த்தால் சம்பந்தமாக தமிழக முதல்வர்புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்- கூறியுள்ளதாவது:-

"இலங்கைத் தமிழர்பிரச்சினை ஒரு வெளிநாடு சம்பந்தப்பட்டபிரச்சினை,இப்பிரச்யில் நேரடியாகத் தலையிடும் அதிகாரம் மாநிலஅரசுக்குக் கிடையாது. அதனால்தான் இப்பிரச்சினையில் நடவடிக்கையெடுக்கும்படி இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியையும்,இந்தியவெளிவிவகார அமைச்சர்நரசிம்மராவையும் நேரடியாகச் சந்தித்துக் கேட்டுக்கொண்டேன்.

—8ம்- பக்கம் பார்க்க

### கட்டிளங்காளை தனபதி



சிறீலங்காவில் சிங்களகாராமையில் வன்முறையாளரால் காட்டுமிராண்டித்தனமாக கோடரியால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்ட தமிழ் நாட்டுச்சகோதரரும் திருவொற்றியூர் நகரஅதிமுக துணைச் செயலாளருமான சுப்பையா தனபதியின் கம்பீரமான தோற்றம் இது.

## பொருட்காட்சியிலிருந்த மாணிக்கக் கற்களை காணவில்லை!

லண்டனில் காமன் வெல்த் நிறுவனத்தில் சிறீலங்கா அரசு நடாத்தும் சர்வஜன வாக்குரிமை கிடைத்த 50 வது ஆண்டுப் பொன் விழாவையொட்டிய பொருட்காட்சியில் நாகபாம்பு காவல் காத்து வந்த மாணிக்கக் கற்கள் களவு போய்விட்டனவாம்.

(செத்த) நாகபாம்பு காவல் காக்கும் இந்த மாணிக்கக் கற்களைக் காணவே பொருட்காட்சிக்கு ஏராளமானகூட்டம் வந்ததாம்.

காணமற்போன மாணிக்கக் கற்களின் பெறுமதி ஐந்து இலட்சம் என்று மாணிக்கக் கல் கூட்டுத்தாபனம்மதிப்பிட்டுள்ளது.

## இந்திய நாடாளுமன்றம் முன் செப்டம்பர் 16-இல் மறியல்

பகிஷ்கரிப்பைக் கைவிட்டுசிறீலங்காநாடாளுமன்றத்துக்குச்செல்வதா அல்லது தொடர்ந்து பகிஷ்கரிப்பை நடத்துவதாஎன்று தமிழர் விடுதலைக்கூட்டணியின் நாடாளுமன்றக்குழு முடிவு

—8ம்- பக்கம் பார்க்க

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்

# தமிழீழத்தை மீட்பது ஒன்றே தமிழினம் உரிமைகளுடன் வாழ ஒரே வழி!

## தமிழர் பிரச்சினைகளைத் தீர்த்துவிட்டதாக அரசு கூறுவது பொய்க்கூச்சல்!

## அமைச்சர் தேவநாயகத்துக்கு பண்டிதர் கா. பொ. இரத்தினம் அறிவுரை!

கே. டபிள்யூ. தேவநாயகம்

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர்,

கொழும்பு,

அன்புடையீர்,

உங்களுடைய 20.8.81 ஆம் திகதிக் கடிதம் கிடைத்தது- நீங்கள் எழுதியதைப் போல நான் உங்களுக்குத் தனிப்பட்ட கடிதம் அனுப்பவில்லை; பகிரங்கக் கடிதத்தையே விடுத்தேன். தனிப்பட்ட கடிதத்துக்கும் பகிரங்கக் கடிதத்துக்கும் வேறுபாடு தெரியாமையால் நீங்கள் தேவையில்லாதவற்றை வலிந்து எழுதியிருக்கிறீர்கள். எனது பெயரைக்கூடப் பிழையின்றி எழுத உங்களால் முடியவில்லை.

சிங்கள அமைச்சர்கள் எனக்கு எழுதிய தமிழ்க் கடிதங்களில் தமிழில் கையொப்பமிட்டு இருக்கிறார்கள். நீங்களோ உங்கள் தமிழ்க் கடிதத்தில் ஆங்கிலத்திலே கையொப்பமிட்டிருக்கிறீர்கள். இது வெட்கத்துக்கும் வேதனைக்கும் உரிய செயல்'

நீங்கள் தமிழ்க்கடிதம் மட்டும் அனுப்பவில்லை. தமிழ்க் கடிதத்துடன் நீங்களே வாசித்து விளங்க முடியாத சிங்களக் கடிதம் ஒன்றுக்கும் கையொப்பமிட்டு அனுப்பியிருக்கிறீர்கள். உங்கள் அரசியலமைப்பு உறுப்புரை 22(2) (அ) வின்படி நீங்கள் எனக்குத் தமிழ்க் கடிதத்தை மட்டுமே அனுப்பலாம்.

நான் முன்னர் உங்களுக்கு எழுதிப் பாராளுமன்ற அஞ்சாட்டுஅறிக்கையிலும்வெளிவந்துள்ள கடிதத்திலே குறிப்பிட்டவாறு இந்தச் சிங்கள அரசாங்கத்தின் அமைச்சரவையில் உங்களுக்குள்ள செல்வாக்கை நன்குதெரிந்தநான் உங்களுக்குத்தொல்லைகொடுப்பது முறைமையாகாது. எனவேதான் நான் பகிரங்கக் கடிதத்தை விடுத்தேன்.

பாராளுமன்றத்திலே நீங்கள் கூறியதையேசெயற்படுத்த முடியாத உங்களிடம் நான் குறைகாண முயல்வேனு? எனக்குத் தனிச்சிங்கள கடிதங்களையும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடிய சிங்களக் கடிதங்களையும் அமைச்சுக்கள், அரசாங்க திணைக்களங்கள் முதலியன பெரும்பாலும்நாள்தோறும் அனுப்புகின்றன- இந்தக்கடிதங்கள் யாவற்றையும் தமிழில் தாருங்கள் என்று தான் எழுதிக்கொண்டிருக்கவேண்டுமென்று கூறுகிறீர்களா? அன்றேல் நீங்கள் பாராளுமன்றத்தில் கூறியதைப் போல ஒவ்வொன்றையும் தமிழில் பெற நீதிமன்றம் செல்ல வேண்டுமா?

எனக்குஅனுப்பப்பட்டசிங்களக் கடிதங்கள் சிலவற்றை நான் சனாதிபதிஅவர்களுக்கு அனுப்பினேன், அவரைஊக்கித் தமிழ்மொழிச் சட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கு ஓராண்டு காலமாகத் தொடர்ந்து அவருடன் கடிதத் தொடர்பு கொண்டேன், நடைமுறைப் படுத்த விரும்பினால் ஒரு மாதத்துள் செய்யலாம் என்றும் அவருக்குச் சுட்டிக் காட்டினேன். எனதுமுயற்சி எவ்வித பயனும் தரவில்லை. இதனை நான் உங்கள் தலைவர் சனாதிபதி அவர்களுக்கு 5.5.80 ஆம் திகதிகொண்ட கடிதத்தில் பின்வருமாறு சுட்டிக் காட்டியுள்ளேன்.

“உங்கள் அரசாங்கம் உங்கள் அரசியலமைப்புக்கொடுக்கும் தமிழ் மொழி உரிமையைநடைமுறைப்படுத்த இன்று வரை பயனளிக்கும் நடவடிக்கை எடுக்கவில்லை. இவ்வளவு காலமும் நான் உங்களோடு தொடர்பு கொண்டு இந்நிலைமைகளைப் பலமுறை எடுத்துக் காட்டியதாலும் பயனில்லை. இனிக் காட்டுவதாலும் பயன் விளை



யப் போவதுமில்லை. தமிழ் மொழியைத் தேசிய மொழியாக்கிவிட்டோம். தமிழ் மொழிஉரிமைகளைக்கொடுத்துள்ளோம். என்று கூறுவது அர்த்தமற்ற பேச்சு என்பதையும், இத்தகைய வெறும் பேச்சுகளால் தமிழ் மக்கள் தொடர்ந்துஏமாற்றமடைய மாட்டார்கள் என்பதையும் நான்சுட்டிக்காட்டத்தேவையில்லை.

இந்நிலையில் நீங்கள் என்ன செய்ய முடியும்? ஆனையால் காவமுடியாததை பூனை காவுமா?

“உங்கள் அரசாங்கத்தின் உள் நோக்கத்தை நன்கு அறிந்தமையாலேயே நான் உங்களுக்கு விடுத்த பகிரங்கக் கடிதத்தில்பின்வருமாறு அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டேன். “அரசியல் சட்டத்திலுள்ள தமிழ் உரிமைகள் இன்றுவரை ஏட்டுச் சுரைக் காய்கள் ஆக்கப்பட்டுள்ளன என்பதை உங்களுக்கும் உங்கள் சனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் பாராளுமன்றத்திலும்வெளியேயும் பலமுறை இடித்துரைத்தேன். அன்றியும் உங்கள் அரசாங்கத்தின் ஆட்சிக் காலம் முழுவதும் அரசியல் சட்டத்திலுள்ள தமிழ் உரிமைகளைத் தானும் தமிழ்மக்கள் பெறமுடியாது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளேன்.”

நான் ஆழ்ந்த தூக்கத்திலிருந்து விட்டு இப்பொழுது தான் உங்களிடம் குறை காண முயல்கிறேன் என்று நீங்கள் கூறுவது பொருத்தமற்றது என்பதை நிரூபிப்பதற்கு இக் கூற்று ஒன்றே போதுமானது.

அன்றியும் சிங்கள எசமானர்களுடன் சேர்ந்து சிறிலங்காவை ஆளுகிறோம் என்று பாராளுமன்றத்தில் கூறிப் பெருமிதமடையும் உங்களுக்கும் உங்கள் நண்பர் அமைச்சர்இராசதுரைக்கும் சிங்களத் தேர்ச்சியும், தமிழ் மொழிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தலும்குறித்து நான் பத்திரிகை வாயிலாக விடுத்த பகிரங்கச் சவாலை மறந்துவிட்டீர்களா?

தமிழ் மொழி உரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கு வெளியிடவிருக்கும் பணிப்புரைகளைஅமைச்சரவையின் அங்கீகாரத்துக்கு அனுப்பியிருக்கிறேன் என்று உங்கள் நண்பர் அமைச்சர் இராசதுரையின் சார்பில் சென்ற ஓராண்டு காலமாக நான்கு முறை எனக்குப்பாராளுமன்றத்தில் கூறப்பட்டுள்ளது. இதனை வெளியிடச்செய்ய முடியாமல் அமைச்சரவையில் நீங்கள் தூங்கிக் கிடப்பதையும்ஆட்சி மோகத்தில் மயங்கிக் கிடப்பதையும் மறுக்கவோ மறக்கவோமுடியுமா?

உங்கள் ஐக்கிய தேசியக் கட்சியால் “தமிழர் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன. மொழியுரிமை முதலியன கொடுக்கப்பட்டுள்ளன” என்று நீங்கள் செய்யும் பொய்ப்பிரசாரத்துக்கு இடமில்லை என்பதை இடித்துரைப்பதற்கே நான் பகிரங்கக் கடிதத்தை விடுத்தேன். உங்கள் சிங்களக் கடிதத்தை இதை நிறுவுவதற்குச் சான்ருகவே காட்டியுள்ளேன். அண்மையில்முத்திரைகளில் தமிழுக்குக்கொடுக்கப்பட்ட இடம் தமிழினத்தைச் சிறுமைப்படுத்துகிறது என்பதை நான் சுட்டிக் காட்டியிருந்தேன். இதைப்பற்றி நீங்கள் மௌனம் சாதித்தது ஏன்?

நான் உங்களுக்கு விடுத்த பகிரங்கக் கடிதம் உங்கள் உள்ளத்தை உறுத்தியுள்ளதுஎன்பதை உங்கள் கடிதம் புலப்படுத்துகின்றது, எனது பகிரங்கக் கடிதத்தின்இறுதியில் நான் இடித்துரைத்ததை மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகின்றேன்.

“ஆளும் சிங்கள இனம், அடக்கப்பட்ட தமிழ் இனம் என்றநிலைமை மாறித் தமிழினமும்சிங்களஇனம்போல ஆளும் இனமாகினாலன்றி இந்த வேற்றுமையை நீக்க முடியாது. இந்த உண்மையை மனச் சாட்சிக்கும் மனிதப் பண்புக்கும் மதிப்பளிக்கும் யாவரும் ஏற்றுக் கொள்வர்” எனும் எனது கூற்று உங்களுக்கும்உண்மை நிலையை உணர்த்தியமையாலேயே நீங்கள் 21,8-81 இல் பாராளுமன்றத்தில் பேசும் பொழுது “அண்மையில் நடைபெற்ற வன்செயல் சம்பவங்கள் தமிழ் ஈழக்கோரிக்கையை விரும்பாதவர்களைக் கூட தனிநாடு கோருவதை விட வேறுவழியில்லை எனச் சிந்திக்க வைத்துளது என்று பேசியிருக்கிறீர்கள். இது மகிழ்ச்சிக்குரியது.

தமிழ் மக்கள் இழந்த உரிமைகளைப்பெற்றுதன்மானத்துடனும் பாதுகாப்புடனும் சிங்கள மக்களுடன் சரிநிகர் சமமாக வாழ வேண்டுமெனின் இதற்குரிய ஒரே ஒரு வழி நாங்கள்தொடர்ந்து போராடியதன் பயனாகக் கண்டதும் இப்பொழுது நீங்கள் காணத்தொடங்கியதுமான தமிழ் ஈழத்தை உருவாக்குவதேயாகும்.

இங்ஙனம்

அன்பன்

கா. பொ. இரத்தினம்பா. உ.

# கூட்டணி- அரசு பேச்சுவார்த்தை கொம்யூனிஸ்ட் இதழின் படப்பிடிப்பு

மாவட்ட அபிவிருத்திச் சபைகளைநிறுவுவதன் மூலம் (தமிழர்) பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சி தோல்வியுற்று விட்டதென்பது தெளிவாகிவிட்டது.

அரசாங்கத்துடனான இந்த இரு பக்கப்பேச்சுவார்த்தைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் இணங்கியிருப்பினும் இந்த உடன்படிக்கை காரணமாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குள்ளேயே பிரிவுகளும் எதிர்ப்புக்களும் வலுத்தன. நடைமுறையிலுள்ள ஜனநாயகஉரிமைகளையும் அமைப்புக்களையும் மாவட்ட அபிவிருத்திச்சபை பறித்து விடுவதால், ஏனைய பெரிய அரசியற்கட்சிகளும்அதைஎதிர்த்தன-

வெறுக்கத்தக்க மற்றோர் வன்முறைச் சம்பவங்களை அடுத்து இப்போது அரசுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே நிகழும் பேச்சுவார்த்தைகளும் மறுபடியும் இருபக்கப் பேச்சாகவேயிருக்கிறது-

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை தமிழர் விடுதலைக் கூட்டணியைக்கொண்டு ஏற்கச்செய்வதில் அரசாங்கம் முன்பு எவ்வாறு எத்தகைய சூழ்நிலையில் வெற்றிவாகை சூடியதோ—அதே சதுரத்தைநோக்கி மறுபடியும் திரும்புவதே அவர்களின் நோக்கம் என்பது சகல அறிக்கைகளிலிருந்தும் புலனாகிறது

ஈழக் கோரிக்கையையொட்டிய பிரசாரத்தை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிட்டுவிட வேண்டும் அல்லது குறைந்த பட்சம் ஒரு குறிப்பிட்ட காலத்துக்காவது இடை நிறுத்தி வைக்க வேண்டும். என்பது கூட்டணியிடம் அரசாங்கம் விடுத்துள்ள கேள்வியாகும். அத்துடன் பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைக் கைவிட வேண்டும் என்று அரசாங்கம் கோரியுள்ளது.

இதற்குப் பிரதியுபகாரமாக; மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்குச்சில மேலதிக அதிகாரங்களைத் தருவதாகவும், யாழ்ப்பாணக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்ட ஈடு வழங்குவது அதுபற்றி விசாரிக்கசர்வதேச நீதிவிசாரணைக் குழுவை நியமிப்பதுஎன்று அரசாங்கம் கூட்டணியிடம்கூறியுள்ளதாக அறியப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் இதற்கு ஒத்துழைப்பு வழங்கினாலன்றி, தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தடைசெய்ய வேண்டும் என்றும் அதன் தலைவருக்கு எதிராக நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றும் அரசாங்கக்கட்சிப் பின்வரிசை உறுப்பினர்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்கும் நெருக்கடியைச் சமாளிப்பது அரசாங்கத்துக்கு கஷ்டமாக இருக்கும் என்றும் கூட்டணித்தலைவர்களுக்குக் கூறப்பட்டதாம்.......'.

—போர்வேர்ட் 1-9-81

# யோகேஸ் வீட்டை பொலீசார் எரித்தது ஏன்?



அண்மையில் இலங்கைவந்திருந்த இந்தியாவின் பிரபல ஆங்கில சஞ்சிகையான INDIA TODAY (இந்தியா ருடே) யின் மூத்த ஆசிரியர் திரு, எஸ். வெங்கட் நாராயணன் சிறீலங்கா ஜனாதிபதிஜே. ஆர், ஜெயவர்த்தனவைப் பேட்டிகண்டார், அவரதுபேட்டி ''இந்தியாருடே''யிலிருந்துசிலோன் டெயிலி நியூஸ் (7.9-81) இதழில் மறுபிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதன் தமிழாக்கம் அப்படியே இங்கு இடம் பெற்றுள்ளது.

—ஆர்



## 'இந்தியா ருடே' ஆசிரியருக்கு சிறீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். அளித்த நீண்ட பேட்டி

கேள்வி:- மாண்புமிகு ஜனாதிபதியவர்களே, இந்தியவம்சாவளித் தோட்டத் தொழிலாளர்கள் வாழுகின்ற இரத்தினபுரியிலும் ஏனைய இடங்களிலும் அண்மையில்இடம்பெற்ற கொள்ளைகளும் தீவைப்புக்களும் அவர்களது உயிருக்கும்உடைமைகளுக்கும் பெரும்சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது- பாதிக்கப்பட்ட மக்கள்மீண்டும் நம்பிக்கையடைய நீங்கள் என்ன நடவடிக்கையெடுக்கப் போகிறீர்கள்?

ஜே. ஆர்:- யாழ்ப்பாண மாவட்டத்தில் 20க்கு மேற்பட்ட பொலீஸ் அதிகாரிகள் கொலை செய்யப் பட்டதன் விளைவாகவே இந்தக் கலவரங்கள் தோன்றின. கொல்லப்பட்ட பொலீசாரில் பெரும்பாலோர்சிங்களவர்கள்—சிலரே தமிழர்கள். பயங்கரவாதிகள் என்று நாம் நாமகரணம் சூட்டியுள்ளவர்களின் வேலையே இது, இந்தப்பயங்கர வாதிகள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளுடன் மிகநீண்டகாலமாகவே சம்பந்தப்பட்டு இருந்தவர்கள். இவர்களில் சிலர் தமிழர் விடுதலைக் கூட்டணியில் உறுப்பினர்களாகவும் இருக்கின்றனர். இப்போது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைமைக்கும்இவர்களுக்கும்எதுவித தொடர்பும் இருக்காது என்று தனிப்பட்ட முறையில் நான் கருதுகிறேன்- ஆனால் ஆரம்பத்தில் பொதுமக்கள் மனதில் விழுந்தமூல எண்ணத்தை அழிப்பதற்கு நீண்டகாலம் எடுக்கும்.

தமிழர்விடுதலைக்கூட்டணி பயங்கரவாதிகளுடன் தொடர்பற்றவர்களாக இருப்பினும் பயங்கரவாதிகளின் கொலைகார நடவடிக்கைகளை நாடாளுமன்றத்திலோ வெளியிலோ தாம் ஆற்றிய உரையின்போது கூட்டணியினர் கண்டிக்கவோஎதிர்க்கவோ இல்லை, தமிழர்விடுதலைக் கூட்டணியினர் தாம் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரானவர்கள்என்பதைப் பகிரங்கமாகவே பிரகடனப்படுத்தி. பயங்கரவாதிகளைப் பிடிப்பதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைத்திருந்தால், யாழ்ப்பாணத்துக்குத் தெற்கேவாழும் யாழ்ப்பாணத்தாரல்லாத மக்களின் உள்ளங்களிலிருந்து தமக்குப் பாதுகாப்பில்லை என்ற உணர்வு நீங்கியிருக்கும். தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரினாலும் அவர்கள் அரசியலமைப்புமாற்றம்மூலமே அதைச்செய்ய விரும்புகிறார்களேதவிர, வன்முறையினாலல்ல என்றநம்பிக்கைஅவர்களுக்குப் பிறந்திருக்கும்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிரான இந்த விரோத உணர்வு வளர்ந்ததனாலும்—தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழ் மக்களுடன் இணைந்திருப்பதனாலும்—நல்லவர்களும் தீயவர்களுமான சில சக்திகள்... அவர்கள் குற்றச்செய்கைபுரிவோராயினும் சரியே அரசியல் வாதிகளாயினும் சரியே—நிலைத்துவிட்ட தமிழின விரோத உணர்வைப் பயன்படுத்தி பதட்டநிலையைத் தூண்டிவிடுகிறார்கள். நிலைமையைக் கட்டுப்படுத்தஎம்மால் முடிந்ததனைத்தையும் செய்கிறோம். தோட்டங்களிலுள்ள குடிமக்கள் குடிமக்களல்லாதோர் நாட்டற்றோர் ஆகியோரே எமது விசேட பாதுகாப்பை வேண்டி நிற்கிறார்கள். அவர்கள் எவருக்கும் துன்பம் விளைக்காதவர்கள்: அவர்கள் எமதுஅரசை ஆதரிக்கும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள். அதனால்தான் அரசாங்கத்தை ஆதரிக்கும் எவரும்,அரசாங்கத்தை ஆதரிக்கும் அந்த மக்களை ஏன் துன்புறுத்த வேண்டுமென்று எனக்கு விளங்கவில்லை. அரசாங்க எதிர்ப்பு இயக்கமொன்று இதன் பின்னணியிலுள்ளதாக நான் நினைக்கிறேன்.

கே:- இப்பிரச்சினை இந்தியாவில் கவலையைஏற்படுத்தியுள்ளது- கடந்தவாரம், நாடாளு மன்றத்திலும் சூடான வாக்குவாதம்இடம் பெற்றுள்ளது.

ஜே. ஆர்:- இந்தியாவின் கவலையை நான் புரிந்து கொள்ள முடியும். இலங்கையில்மட்டுமல்லஉலகில்எங்கு யார் தாக்கப்பட்டாலும் இதே கவலை ஏற்படவேண்டும். பௌத்தர்களோ அல்லது முஸ்லிம்களோஇந்தியாவில்யார்தாக்கப்பட்டாலும் நாமும் கவலைப்படுகிறோம். ஆனால்இந்தியாதேவையற்ற கவலையைஇப்பிரச்சினையிலே காட்ட வேண்டியதில்லை.சிறீலங்காவில்இதனால்தப்பெண்ணம் ஏற்படும். எமது பிரச்சினையில் பிறர் தலையீட்டை நாம் விரும்பமாட்டோம். இந்திய அரசு போலவோ உலகில் வேறெந்த நாட்டரசையும் போலவோ எமது அரசும் சுதந்திரமான, ஜனநாயக பூர்வமான,மனிதாபிமானமுள்ள ஒருஅரசு. அவர்களோ(இந்திய அரசோ)அல்லது உலகில் வேறுஎந்த ஒரு அரசுமோ. எப்படி ஆளுவது என்று எமக்குக் கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை.

கேள்வி:- உங்கள்அமைச்சர்கள் சிலர் வெளிநாட்டுத் தலையீடு உண்டென்று கூறியுள்ளார்களே,நீங்கள்அதை நம்புகிறீர்களா?

ஜே.ஆர்:- நான் இதை நம்பவும் இல்லை, மறுக்கவும் இல்லை: பயங்கரவாதம் எப்போதும் சர்வ தேசியத் தன்மை கொண்டது. அது பற்றி நாம் விசாரணை நடத்துகிறோம்,

கேள்வி:- இந்தியர்களை எவ்வகையிலேனும் நீங்கள் சந்தேகப்படவில்லையா?

ஜே,ஆர்:- இந்தியர்களுட்பட எவரையும் நான் சந்தேகிக்கவில்லை.

கேள்வி:- கடந்தவாரம் நான் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று சிங்களவர்களுடனும், தோட்டத் தொழிலாளர்களுடனும் பேசினேன். உங்கள் அமைச்சர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றியசிலஉரைகள்,பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தோன்றியது. உங்கள் அமைச்சர்கள்அவ்வாறு இனரீதியில் பேசுவதை நீங்கள் அங்கீகரிக்கிறீர்களா?

ஜே. ஆர்:- இருக்கலாம். தமிழர் விடுதலைக் கூட்டணியினரையும் விட மிகவும் குறைவாகவே அவர்கள் பேசியுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணி ஆட்களே, தூண்டிவிடக் கூடியபேச்சுக்களை நிகழ்த்தி இதை ஆரம்பித்து வைத்தனர். அந்த விவாதம்(எதிர்க்கட்சித்தலைவருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானவிவாதம்) நடைபெற்று உள்ளே புகைந்துகிடந்த உணர்வுகள் வெளியே போயிருக்காவிடின், சிங்கள மக்கள் இன்னும் கூடுதலாகக் கொந்தளித்திருக்கும் சாத்தியம் இருந்தது; அவர்கள்(சிங்களவர்கள்)கேட்கிறார்கள்—அரசாங்கம் என்ன செய்கிறது? அரசு எம். பீக்கள் என்ன செய்கிறார்கள் என்று.

கேள்வி:. இந்திய வம்சாவளித் தமிழரும்சரி இலங்கைத் தமிழரும்சரி—தமக்கு இங்குபாதுகாப்பில்லை என்ற பெரும் பீதியால் அவதிப்படுவதை ஒருவரால் உணர முடிகிறது. இதனால்தான் அவர்கள் கிளர்ச்சியடைந்து தனிநாடு கோருகிறார்கள்.

ஜே.ஆர்:- தனிநாடு பற்றிப்பேசுவதால்தான் அவர்களுக்கு பாதுகாப்பில்லையென்ற உணர்வு ஏற்படுகிறது- தனிநாடு கோருவதை அவர்கள்கைவிட்டால்இவையெல்லாம் மறைந்துவிடும்.

கேள்வி;- சிங்களம்பேசத் தெரியாவிடின் தமிழருக்கு வேலைகிடைப்பதில்லைஎன்று அவர்கள்கூறுகிறார்கள்அவர்களுக்குப்பல்கலைக்கழக அனுமதியில் பிரச்சினைகள்உண்டு பாரபட்சமிருப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்- இதனால் வெறுப்படைந்த அவர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள்- சிங்களவர்கள் வாழும்காலத்திலிருந்தேதாமும் இங்குவாழ்வதாக அவர்கள் கூறுகிறார்கள், நாம் தமிழ்ப் பிரதேசமில்லாத ஏனைய இடங்களில் மகிழ்வுடன் வாழ முடியாவிடின் எமது பிரதேசங்களுக்கு சுயாட்சிதரட்டும்அங்காவது பாரபட்சமின்றி மகிழ்ச்சியுடன்வாழ்வோமென்று தமிழர்கள் கூறுகிறார்கள்.

ஜே.ஆர்:- மாவட்ட அபிவிருத்திச்சபைகளின் மூலம் இவையாவும் செயற்படுத்தப்படும். சட்டத்தின்மூலம் ஒரே இரவில் இவற்றை மாற்றிவிட முடியாதுஆனால் தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த பயங்கரவாதத்தில் நம்பிக்கையுள்ளஒரு பிரிவினர் மாவட்ட அபிவிருத்திச்சபைகளை எதிர்க்கின்றனர். அவர்கள் எமது அபிவிருத்திச்சபை பிரதான வேட்பாளரைக்கொலைசெய்தனர்- அவர்கள் ஒத்துழைப்பதில்லை. இதையார் செய்தது என்று எமக்கு ஒருவரும் கூறவில்லை. தமிழர் விடுதலைக் கூட்டணிமுன் வந்து மாவட்ட அபிவிருத்திச் சபைகளையே தாம் ஆதரிப்பதாகக்கூற ஏன் தயங்குகிறார்கள்? அவர்களதுமுக்கிய குறைபாடு எமது சிலமுடிவுகளை நாம் அமுல்படுத்தவில்லையென்பதே. அமுல்செய்வதற்குக் காலம் எடுக்கும். இதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஒத்துழைப்பு எமக்குத் தேவை. அபிவிருத்திச்சபைகளுக்கு அப்பால் நான் போக முடியாது. பயங்கரவாதம் நிலவும்வரை இருபகுதியினரும் ஒன்றுபடமுடியும் என்று நான்நினைக்கவில்லை. நாம் எந்தச் சமயம் எந்த உடன்படிக்கையை எழுதினாலும் அவர்கள் போய்ச் சிங்களப் பொலீசாரைச் சுடுகிறார்கள்.

கேள்வி:. ஆகவே உடன்படிக்கைக்கு வரமுடியாமல் பயங்கரவாதமே குறுக்கே நிற்பதாக நீங்கள் கூறுகிறீர்கள்.

ஜே.ஆர்;- அவர்கள்கேட்டதையெல்லாம் செய்து கொடுத்துவிட்டேன். நாம் இணங்கியவற்றைச் செயற்படுத்தவில்லை யென்பது தான் அவர்களதுஇன்றைய புகார். ஆனால் அவர்கள் எம்முடன் இணைந்து அவற்றை ஏன் அமுல்படுத்த முடியாது?

கேள்வி:. யாழ்ப்பாணத்தில் மக்கள் மிகுந்த கலக்கத்துடன் இருக்கிறார்கள். ஐம்பதாண்டு காலமாக இருந்துவந்த நூலகத்துக்கும் 97000 விலைமதிப்பற்றபுத்தகங்களுக்கும் பொலீசார் நெருப்பு வைத்து விட்டார்கள். அத்துடன்ஒருகூட்டணி எம்.பியின் இல்லத்தையும் கொளுத்தி விட்டார்கள்.

ஜே.ஆர்:-அவர் யோகேஸ்வரன்) பயங்கரவாதிகளுடன் தொடர்புடையவர் என்றுஅவர்கள்(பொலீசார்) கருதியதனால்தான்அவ்வாறு நடைபெற்றது.

கேள்வி:- அவரைப்பிடித்துக்கொன்றுவிடலாம் என்பது அவர்கள் முயற்சிபோலத் தெரிகிறதே!

ஜே,ஆர்.- பயங்கரவாதிகள்அதையும்செய்வதுண்டு.

கேள்வி:- ஆகவே இது பழிக்குபழிவாங்கும் முயற்சியா? இம்மாதிரியான சூழ்நிலை ஒரு அந்நியமான நிலையை ஏற்படுத்திவிடும், நீங்கள் அங்கு சென்று அவர்களுடைய பாதுகாப்புக் குறித்து உங்களது அக்கறையை வெளிப்படுத்தி உறுதியளித்தால் அவர்களுக்குஒரு வகையான ஆறுதல் கிடைக்கும். பதட்ட நிலையைத் தணிக்க நீண்டகாலம் செல்லும்.

ஜே,ஆர்:- நான் அதைச் செய்யவிரும்புகிறேன்ஆனால்

—6-ம் பக்கம் பார்க்க

WE DON'T WANT OUR CHAINS MADE COMFORTABLE — WE WANT OUR CHAINS REMOVED

# விலங்கை தளர்த்தவேண்டாம் முற்றாக அகற்றுங்கள்!

தமிழ் மக்களின் உயிருக்குயிரான ஒரேயொரு குறிக்கோளான தமிழீழ நாட்டு விடுதலைப் போராட்டம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களால் கைவிடப்பட்டு விடுமா? அல்லது தற்காலிகமாகவேனும் கைவிடப்படுமா? அல்லது ஒத்திவைக்கப்படுமா? என்கிற ஏக்கமும் கவலையும் நிறைந்த கேள்விகளும்...

தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்றப் பகிஷ்கரிப்பைக்கைவிட்டு. மீண்டும்சிறீலங்காப்பாராளுமன்றம் என்றசிறைக்குள் சென்று புகுந்து கொள்ளப்போகிறார்களா என்கிற கேள்வியும்—

தமிழர் விடுதலைக் கூட்டணித்தலைமையை ஒருவிடுதலை இயக்கத் தலைமையென்று முற்று முழுதாக நம்பி விசுவாசித்தவர்களின் உள்ளங்களிலே இன்று பூதாகாரமாகஎழுந்துபெருமூச்சை ஏற்படுத்திநிற்கின்றன.

தமிழீழ சுதந்திரம் என்பது ஓர் இனத்துக்கு எதிரானதாகவோ, அல்லது வஷமத்தனமாகவோ, இனவாத வகுப்புவாத அடிப்படையிலோ ஏற்றுக்கொள்ளப்பட்டஒருநிலைப்பாடன்று.

இலங்கைத்தீவின் இருநாடுகளாகியசிறீலங்காவும் தமிழ் ஈழமும், ஒரே அரசின் கீழ் ஒன்றுபட்டுவாழ முடியாதென்பதை 30 ஆண்டுகாலத்துக்கு மேற்பட்ட அரசியல் அனுபவங்களின் அடிப்படையை நன்கு அலசி ஆராய்ந்து மறைந்த மூதறிஞரும் தமிழீழ தேசியதந்தையுமாகிய திரு. சா.ஜே,வே, செல்வநாயகம் தலைமையில் தமிழர்கள் ஒன்றுகக்கூடி நன்கு சிந்தித்து 1976ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டில் மேற்கொண்டமாற்ற முடியாத விட்டுக்கொடுக்க முடியாத அடைந்தே தீரவேண்டிய தீர்மானமே தமிழீழ சுதந்திரத் தீர்மானம்.

இத்தீர்மானத்துக்கு 1977பொதுத் தேர்தலில் ஜனநாயக முறையில் தங்கள் வாக்குச்சீட்டுக்களின் மூலம் தமிழ் மக்கள் தமது சம்மதத்தையும் அங்கீகாரத்தையும் ஆணையையும் வழங்கியுள்ளனர்.

தமிழீழநாட்டுமக்கள்தாம் தமது நாட்டில் சுதந்திரமாக வாழவிரும்பித் தமது நாட்டின் சுதந்திரத்தைக் கோருகிறார்களே தவிர—அவர்கள் வேறு எந்த ஒரு இனத்தையும் அழிக்கவோ கெடுக்கவோ துளியும் விரும்பவில்லை தமது இறைமையைப் பயன்படுத்த விரும்புகிறார்களே தவிர—மற்றவர்களின் இறைமை மீது ஆதிக்கம் செலுத்த விரும்பவில்லை.

உண்மையில் தமிழீழ விடுதலையென்பது ஒரு கோரிக்கைகூட அன்று; கோரிக்கையென்பது மற்றவர்களிடம்கோரிப் பெறுவது; தமிழ் மக்களோ. தமது சுதந்திரத்தை நிலைநாட்ட விரும்புகிறார்களே தவிர—சுதந்திரத்தையாரிடமும்கைநீட்டி யாசகம் கேட்கவில்லை,

"WE DON'T WANT OUR CHAINS MADE COMFORTABLE —WE WANT OUR CHAINS REMOVED (எங்கள் விலங்குகளை சற்றுத்தளர்த்திவிட வேண்டாம்— விலங்கையே கழற்றிவிடுங்கள்) என்பதே சுதந்திர இலட்சியத்தின் ஆத்மீக கீதமாகும்.

இந்த உயர்ந்த உயிரனைய குறிக்கோளைத் தற்காலிகமாகவேனும்கைவிடவோஒத்திவைக்கவோ கூட்டணிக்கு தமிழ் மக்கள் தினையளவுகூட அதிகாரம் வழங்கவில்லை. இந்த இலட்சியத்தை முன்னெடுத்துச் செல்வது கூட்டணியின் இன்றைய தலைமைக்கு ஒருவேளை சுமையாகத் தோன்றினால்— அதைச்சுமக்கக் கூடியவர்களிடம் பொறுப்பை ஒப்படைப்பதுதான் நேர்மையேதவிர—மக்கள் வைத்தநம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் துரோகம் செய்வதல்ல-

எண்ணம்

எந்தக்காரணத்துக்காகவேனும் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையிலிருந்து பிறழவோ— பின்வாங்கவோ— விட்டுக்கொடுக்கவோ—ஒத்திப்போடவோ- கூட்டணி எம்.பீக்கள் ஒப்புக் கொள்வார்களானால்...தமிழ் மக்கள் வேதனையோடு காத்திருந்து அடுத்த தேர்தலில் இவர்களை நிச்சயமாகநிராகரிப்பார்கள் என்பதைச் சுட்டிக்காட்டுவது எமது கடமையாகும்.

சிறீலங்கா நாடாளுமன்றத்துக்கு மறுபடியும் கூட்டணி பா.உக்கள் செல்வார்களா என்பது மக்கள் மனங்களைஅலைக்கழிக்கின்றஅடுத்த கேள்வியாகும்:

யூன் 9 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பொலீஸ் அட்டூழியம் சம்பந்தமாக ஐந்து அம்சக்கோரிக்கையொன்றை கூட்டணித்தலைவர் முன் வைத்து நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்தனர்,

கூட்டணி நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்துவரும் கடந்த மூன்று மாதங்களிலும் தமிழ் மக்களுக்கு எதிரான சொல்லொணக் கொடுமைகள் தீவு முழுவதும் திட்டமிட்டுஅதிகரித்து வந்துள்ளனவே தவிர—கிஞ்சிற்றும்ஆறுதல் கிடைத்திடவில்லை,

போதாக்குறைக்கு தமிழினத்தின் தலைவரைப் பகிரங்கமாக சித்திரவதை செய்து கொன்றொழித்திடவேண்டுமென்றுநாடாளுமன்றத்தில் பேசப்பட்ட தூண்டுதற் பேச்சுக்கள் தமிழனுடையகாதிலேநாராசம்போலஇன்றும் கேட்டபடியேஉள்ளன.

★ கூட்டணி முன்வைத்த கோரிக்கைகளுள் முக்கியமானதும்முதன்மையானதுமான அனைத்துலக நீதி விசாரணைக்கு அரசு முற்றாக மறுத்து விட்டது,

★ பல்லுப் பிடுங்கப்பட்ட (ஆயுதங்களற்ற) ஊர்காவற்படைகளால்தமிழினத்துக்கு ஏது பாதுகாப்பு?

★ தமிழ்ப்பகுதிகளில் 75சதவீதம் தமிழ் பேசும் பொலீசார் நியமிக்கிறோம் என்ப காலத்துக்குக் காலம் கூறப்பட்டு காற்றிே பறக்கவிடப்படும் சிங்கள அரசுகளின் வழ யான வெறும் உறுதிமொழி......!

★ இராணுவத்தை அகற்றும்படி டணி கோரியது. அரசோ, இருந்த பொல நிலையங்களைக்கூடமூடிவிட்டு கிராமமட்டத்தி இராணுவ முகாம்களைத் திறந்துள்ளது, வட கில் மட்டுமல்ல—கிழக்கிலும் இராணுவத்தை நிரந்தரமாக குவித்துள்ளது.

★ நட்டஈடு—1977 ஆம் ஆண்டு ச சோனி சிபார்சு செய்த நட்டஈடே வழங் படாதபோது இப்போதைய சம்பவங்களுக் நட்டஈடு வழங்கப்படப் போகிறது? அரசி கஜனைவில் பணம் இல்லையே!

எனவே கூட்டணிப்பா. உக்கள் அரசின் மாயா ஜால வாக்குறுதிகளை ஏற்று: தம்மையும் ஏமாற்றித் தமிழ் மக்களையும் ஏமாற்றுதுஒத் ழையாமை என்ற அடிப்படையில்தொடங்கி நாடாளுமன்றப் பகிஷ்கரிப்பைத் தொட வேண்டுமென்பதே தன்மானமுள்ள தமிழ களின் ஒருமித்தகருத்தாகும்.

# இப்போது தமிழ் இனத்துக்கு மரணயோகம் அமிர்தயோகம் வரட்டும்- அதுவரை அவசரம் வேண்டாம்!

## தமிழ்த் தலைவர்களுக்கு 'சுடர்' இடித்துரை

'மரண யோகம்' எனும் தலைப்பில்திரு, கரிகாலனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் 'சுடர்' (ஆடி-ஆவணி 1981) இதழ் எழுதியுள்ள ஆசிரியத் தலையங்கம் வருமாறு:-

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் தமிழ்மக்களின் பிரச்சினைகள் குறித்து சிங்கள அரசின் தலைவர்ஜே. ஆர். ஜயவர்த்தனவுடன் பேச்சு வார்த்தைகள்நடாத்துவதாக அறிகின்றோம். பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. பேசித்தீர்க்கமுடியுமென்றால், சீரியமுறையில் பேசித்தீர்க்க வேண்டியதுதான். பேசித்தீர்ப்பதுஎன்று தீர்மானித்தபின் அரசின் தலைவர்— நாட்டின்தலைமை நிர்வாகி- ஜே,ஆர். ஜயவர்த்தனவுடன்தான் பேச வேண்டும் மறுப்பதற்கில்லை.

ஆயினும், கேள்வியொன்று கிளர்கிறது- பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்கு இதுதான் அமிர்தயோகமா?

யூன் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் தாக்குண்டதமிழர்களின் புண்கள் ஆறுவதற்குள் யூலை மாதத்தில்மட்டக்களப்பில் தாக்குதல். மட்டக்களப்புத் தமிழனின்இரணத்திலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருக்கும் போதே ஆகஸ்ட் மாதத்தில் மலைநாட்டுத் தமிழர் மீதுதாக்குதல்— நாடெங்கும் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு, கத்திக்குத்து, அடி, உதை அச்சுறுத்தல்......... இத்தியாதி.

பல்லாயிரக் கணக்கான தமிழ்மக்கள் அனைத்தையும் இழந்து அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர்-இந்தப்பஞ்சமா பாதகங்களுக்கு பாத்திரவாளிகளாகவும்சூத்திரதாரிகளாகவும் காவல்— ஆயுதப்படையினரும் அரசியல் புள்ளிகளும் பங்களிப்புச் செய்திருக்கிறார்கள்,

★ தாக்கிய வர்க்கம்தாக்குண்ட வர்க்கத்தைத் தமது தமிழ்த் தரகர்கள் மூலமாகப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருக்கிறது. தரகர்களோமேட்டுக்குடிமேதாவிகள் — கலாநிதிகள்-இந்த நாட்டுத் தமிழ்க் குடி மக்களின் அபிலாசைகள் அவர்களுக்குப்புரியுமோஎன்னவோ அடிபட்ட வர்க்கம் அச்சமும் பீதியும் அலங்கோலமுமாக உயிரைக்கையில்பிடித்துக் கொண்டுஉரிமைப்பிரச்சினை பற்றிப் பேசக்கூடுமா?

★ சிங்களப் பேரினவாதம் தமிழன்மீது அடிக்கடி நடாத்திவந்த தாக்குதல்களையிட்டுச் சலனமற்றிருந்த நாகரிக உலகில் இன்றேஅர்த்தமுள்ள சலசலப்பு கேட்கி

—5ம் பக்கம் பார்க்க

# சிறீலங்காத் தூதரகம்முன் மறியல்;

## சட்டமன்ற உறுப்பினர் பொன்னுரங்கம் தலைமையில்

# 42 திமுகவினர் கைது!

## இதுவரை விளக்கமறியலில் 440 கழகத்தவர்கள்!

இலங்கைத் தமிழர்களுக்குஎதிரான இனக்கொலையைக் கண்டித்து சென்னையிலுள்ள சிறீலங்கா அரசின் துணைத்தூதரகம்முன்பு ஐந்தாவதுநாளாக (8.9-81இல்) மறியல் போராட்டம் நடத்துவதற்கு ஊர்வலமாகச் சென்ற திராவிட முன்னேற்றக்கழகச் சட்டமன்றஉறுப்பினர் திரு. ப், பொன்னுரங்கம் எம்.எல்-ஏ உட்பட 42 திமுக தொண்டர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்,

இலங்கைத்தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்து இந்தியத் தமிழகத்தாரின் குமுறலைத் தெரிவிக்க 29,8.81இல் திராவிட முன்னேற்றக் கழகம் தனது அடையாள ஊர்வலத்தையும்மறியலையும் நடத்தியது, அப்போதுசென்னை மாவட்ட திமுகசெயலாளர் திரு, ஆர்,டி.சீத்தாபதிஎம், எல்.சி, சட்டத்தரணிவி,என் சோமு. எல்; ஏ. து. புருடோத்தமன் எம்-எல்,ஏ மாணவர் அணிச் செயலாளர் இரா. கணேசன் உட்பட 250க்கு மேற்பட்ட திமுகதொண்டர்கள் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். இவர்களில்பத்து பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அடையாள மறியலில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டதை அடுத்து இலங்கைத் தமிழர் உரிமைகாக்கும் மறியறபோராட்டத்தை செப்டம்பர் 15 வரை தொடர்ந்து நடத்துவதென்று கழகத் தலைவர் கலைஞர் முடிவு செய்தார்.

அதன் பிரகாரம் 3:9,81 முதல் தொடர்ச்சியான மறியல போராட்டம் ஆரம்பமானது,2.9.81இல் மறியல் போராட்டத் திலீடுபடச் சென்ற முன்னள் சென்னை மாநகர மேயர் மைனர் மோசஸ்தலைமையில்53 திமுகழகத்தினர் கைதுசெய்யப் பட்டனர்-

4.9.81இல் இரண்டாவது நாள் மறியற் போராட்டத்தில் திருவல்லிக்கேணிப் பகுதி திமுக செயலாளர் திரு,பொ. மாணிக்கம், சட்டக்கல்லூரி மாணவர்கள் கே-வி. ராஜாராம் முனியப்பன், ஆகியோருட்பட 18 பேர் கைது செய்யப்பட்டனர்... ''இலங்கைத் தமிழர்க்கு இன்னல் தரரதீர்இலங்கைத் தமிழரின் உயிரைப் பறிக்காதிர், மத்தியஅரசே; இலங்கைத் தமிழருக்குப் பாதுகாப்பு வழங்கு'' என்ற முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தபோது இவர்கள் கைதாகினர்.

திமுகழகத்தின் மூன்ரும் நாள் மறியல் போராட்டம் 5,9,81இல்சிறீலங்காத் தூதரகம்முன்நடைபெற்றபோது இதற்குத் தலைமைதாங்கிய திரு. ரகுமான்கான் எம்எல் ஏ. உட்பட 13 திமு கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

கழகத்தின் நான்காவது நாள் மறியற் போராட்டம் 7.9-81இல் சோ.இ, மூர்த்தி சி, இரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது 4பெண்கள் உட்பட 64 கழகத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

8.9,81இல் ஐந்தாவது நாள் மறியற் போராட்டத்திற்கு தமிழக சட்டமன்ற உறுப்பினர்திரு.ப.பொன்னுரங்கம் தலைமைதாங்கினர். அவருடன் 42 திமுகதொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்;

இவர்கள் சகலரும் 15 நாள்விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

9.9.81 இல் ஆருவதுநாள் போராட்டத்துக்கு திமுக தலைமைக்கழக வழக்கறிஞரும் தமிழீழத் தோழமைக் கழகத்தைச் சேர்ந்தவருமான வழக்கறிஞர் டி. பி- இராதா கிருட்டினன் தலைமைதாங்குகிருர்.

---

# தமிழர் கேட்டதை எல்லாம் நாம் கொடுத்தது இல்லை

### யூ.என்.பி.செயற்குழுவில்காமினிபேச்சு

"எமது ஜனதிபதி ஜே. ஆர்.ஜெயவர்த்தன,பிரதமர் ஆர். பிரேமதாசாஆகியோர் தலைமை தாங்கும்இந்த அரசாங்கம் அதிகாரத்திலிருக்கும் வரை ஈழக்கோரிக்கை ஒருபோதும் வெற்றியடையப் போவதில்லை.''

கடந்த வெள்ளிக்கிழமை (4-9-81) வெள்ளவத்தை ராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகக் குழுக்கூட்டத்தில் பேசிய காணி, காணி அபிவிருத்தி மகாவலிஅபிவிருத்திஅமைச்சர் திரு. காமினி திசாநாயகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஆனுல் ஈழப்பிரச்சினைக்கான தீர்வு— தமிழருக்கு எதிரான ''புனித யுத்தம்'' ஒன்றை மேற்கொண்டுஅவர்களைக் கொன்ரொழிப்பதல்ல என்பதை ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறிஞர்.

1500 நிர்வாகக்குழுஉறுப்பினர்களைக் கொண்ட இக் கூட்டத்தில், அரசாங்கக் கட்சி பா-உக்களும், அமைச்சர்களும் பங்கு பற்றினர்.

அமைச்சர் திசாநாயகா மேலும் கூறியதாவது:-

"தமிழர் கேட்பது யாவும் வழங்கப்படுவதாகவும்,அவர்களுக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகக் கொடுக்கப் படுகிறதோ அதைவிட மேலும் மேலும் கேட்டபடியே இருக்கிருர்கள் என்றும் சிலர் கூறிஞர்கள். இந்தப் பேச்சு உண்மையானது அல்ல.

காலஞ் சென்ற ஜீ. ஜீ, பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது கேட்ட பொழுது அது வழங்கப்படவில்லை,

பின்னர், காலஞ் சென்ற திரு,செல்வநாயகம் சமஷ்டி அரசியலமைப்பொன்றைக் கோரியபோதுஅதுவும்வழங்கப்படவில்லை.

இப்போது அவர்கள் தனிநாடு கோருகிருர்கள். எமது கட்சியும், எமது ஜனதிபதியும் எமது பிரதமரும் பதவியிலும்அதிகாரத்திலும்இருக்கும் வரை, தனிநாடும் நிச்சயமாக வழங்கப்படமாட்டாது.

ஈழக்கோரிக்கையை நிராகரிக்கும் தமிழர்களும்இருக்கிருர்கள்.

வடக்கிலே கொலைசெய்யப்பட்ட பொலீஸ் அதிகாரிகளில் மூன்றில் இரு பகுதியினர் தமிழர்களே, இது பயங்கரவாதிகளின் வேலை.

—சிலோன் டெயிலி மிறர் (7-9-81)

---

—4ம்- பக்கத் தொடர்

றது. 'இலங்கைக்கு இப்போ வரலாமா — வேண்டாமா?'' என்று பிரித்தானியப் பேரரசியர் சபலப்பட்டுக் கொண்டு நிற்கிருர். பக்கத்திலுள்ள பாரதத்தின் பாராளுமன்றத்தில் நாளாந்தம் பரபரப்பு! இந்திய ஜனதிபதி சஞ்சீவரெட்டி 'பிறகு வருகிறேன்' என்று தன் இலங்கை விஜயத்தைப் பின்போட்டிருக்கிருர். தமிழ் நாட்டிலும் புதுவையிலும் எமது உடன் பிறப்புக்கள்உணர்ச்சிப்பிழம்பாய்நிற்கிருர்கள். முதல்வர் எம்,ஜி.ஆரும் கலைஞர் கருணுநிதியும்இணைந்துகொண்டு பிரதமர் இந்திரா அம்மையாரை சந்திக்கவிருக்கிருர்கள்- இலங்கை அரசின் கெடுபிடிகளுக்கு ஆளான வெளிநாட்டுப் பத்திரிகையாளர் ஏதேச்சாதிகார ஆட்சியின் அட்டூழியங்கள் பற்றி தமது ஏடுகளில் எழுதிக்கொண்டிருக்கிருர்கள்- வெண்ணெய் திரண்டு வரும்போது தாழியைப் பக்குவமாய் பேண வேண்டாமா?

★ சிங்கள வெறியாட்டமொன்று நடந்து ஓய்ந்து கொண்டிருக்கிறது. இவ்வேளையில் சமாதானத்தைப் பேணுவதற்காகசமரசம்என நாம் கூறிஞல், அமைதிக்கு பங்கம்விளைவித்ததில்நாமும் பங்காளிகள் என்று அர்த்தமாகிவிடாதா?

★ எமது அயல் நாட்டு நண்பர்கள் — ஆதரவகளர் மத்தியில் அவநம்பிக்கை தோன்ருதா?

வன் செயல்கள் மூண்டெழுந்து எமது மக்களை வதைத்த வேளையில் கண்டி பெரஹரா காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருந்தஜனதிபதி ஜயவர்த்தன, கண்டியிலிருந்து கொழும்பு திரும்பிய கையுடன் கனடாவிலிருந்து டாக்டர் ஏ, ஜே. வில்சனை அவசரமாக அழைத்து த.வி, கூட்டணித் தலைவர்களிடம் தூதுஅனுப்பிஞரென்ருல் சோழியன் குடுமிசும்மா ஆடியிருக்குமா?

எமது தலைவர்களுக்குப் பணிவுடன் கூறுகிரும்- அமிர்தயோகம் வரட்டும்— அவசரம் வேண்டாம்,

---

### புதுடில்லியிலும்

# மாணவர்கள்

### ஆர்ப்பாட்ட

# ஊர்வலம்

இலங்கைத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டகொடுமைகளை ஆட்சேபித்துஇலங்கைத் தமிழ் மாணவர்களும் இந்திய மாணவர்களுமாகச் சேர்ந்து புதுடெல்லியிலும் ஓர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் செப்டம்பர் 5 ஆம் நாள் நடத்திஞர்கள். புதுடெல்லியிலுள்ள சிறீலங்காத் தூதரகத்தை நோக்கிச் சென்ற இந்த ஊர்வலத்தின் முடிவில் புதுடில்லியிலுள்ள சிறீலங்காத் தூதரிடம் அவர்கள் மூன்று கோரிக்கைகளைக் கொண்ட ஓர் மகஜரைக் கையளித்தனர்.

அம்மகஜரில்முன்வைக்கப் பட்டிருக்கும் மூன்று கோரிக்கைகளும் வருமாறு:-

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடைபெற்ற இனக்கொலைபற்றிவிசாரணை நடத்த ஒரு அனைத்துலக நீதி விசாரணைக்குழுவைசிறீலங்கா அரசு நியமிக்கவேண்டும்-

'ஹேக்' இல் உள்ள அனைத்துலக நீதிமன்றம் இலங்கையில் நடைபெற்ற இனக் கொலை வன்செயல் தொடர்பாக விசாரணை நடத்திஆறு மாத காலத்திற்குள் அறிக்கை வெளியிட நடவடிக்கை எடுக்கவேண்டும்,

தமிழ் மக்களுடைய உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும்;

இவர்களின் மகஜரை ஏற்றுக்கொண்ட சிறீலங்காத் தூதரகச் செயலாளர், "உங்களது கோரிக்கைகளையும் உணர்வுகளையும் எனது அரசின் கவனத்துக்குக்கொண்டு வருகிறேன்'' என்று மாணவர்களிடம் தெரிவித்தார்,

---

# இளைஞர்கள் வெளியேறிய பின் ஈழம் எப்படி அமைப்பது?

சென்னையிலிருந்து வடக்கே செல்லும் விரைவுப் புகைவண்டிகள் ஒவ்வொன்றிலும் ஈழத்தைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் முப்பது நாற்பது பேர்கள் வீதம் சென்று கொண்டே இருக்கின்றனர்.

'எங்கே செல்கின்றீர்கள்?' என்று அவர்களைக் கேட்டால்,

"இலங்கையில் பிழைப்பதற்கு எவ்வித வாய்ப்பும் எங்களுக்கு இல்லை. சிங்கள அரசு மக்களின் கெடுபிடிகள் நாளாந்தம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. தமிழீழம்அமைப்பதற்கான முயற்சிகளிலும் தலைவர்கள் நேரிடையாக இறங்குவதாகத் தெரியவில்லை. எனவே பிழைப்பைத் தேடிப்போகின்ரும். முடிந்தால் நிலமார்க்கமாகவே ஈரான் போன்ற மேற்காசிய நாடுகளுக்கும் ஐரோப்பியநாடுகளுக்கும் போவோம் என்று பதில் சொல்கின்றனர்' இதைநிறுத்த வேண்டும்.

ஏற்கெனவே, "சிங்களக் குடியேற்றத்தால் தமிழீழத்தின் எல்லைகள் பறிபோகின்றன என்று கூறும் தமிழீழத் தலைவர்கள் போராடக்கூடியஇளைஞர்கள் எல்லாம் நாட்டைவிட்டு வெளியேறியபின் எப்படித் தமிழீழம் காண்பார்கள்?

(நன்றி: மர்மம்)

---

சுதந்திரன் உங்களுக்கு கிடைக்கவில்லையா?

உடனே

ரூபா 150 செலுத்தி சந்தாதாரராகுங்கள் உங்கள் பிரதியை உறுதி செய்துகொள்ளுங்கள்.

# ‘இந்தியத் தமிழ் நாட்டிலுள்ள ஈழ இயக்கத்தை தடைசெய்வேன்’

## இந்தியப் பத்திரிகையாளருக்கு ஜே. ஆர் பேட்டி

—3-ம் பக்கத் தொடர்

அதற்கு எனக்கு நேரம் வேண்டும். பெரிய பாது காப்புக்களுடன் நான் அங்கு போக விரும்பவில்லை! ஏதாவது நடந்து விடுமானால் அது நிலைமையை இன்னும்மோசமாக்கி விடும்-

கேள்வி:. ஈழம் புலிகள் உங்களுக்கு ஏதாவது செய்வார்கள் என்று நான் கருதவில்லை.

ஜே.ஆர்:- நான் அதைச் செய்ய முயற்சிக்கிறேன்.

கேள்வி:- 15 ஆண்டுகால இந்திய...இலங்கை உடன்படிக்கை இந்த ஆண்டு அக்டோபருடன்காலாவதியாகிவிடும். இன்னும் 5 இலட்சம் மக்கள் நாடற்றவர்களாக வேயிருக்கப் போகின்றனர். அவர்களை என்ன செய்யப் போவதாக உத்தேசம்?

ஜே.ஆர்:- அது குறித்து அதிகார பூர்வமாக விவாதித்து வருகிறோம்.

கேள்வி:- இன்னொர் உடன்படிக்கை எழுதப்போகிறீர்களா?

ஜே.ஆர்:- ஆம் அதுமாதிரி யொன்றுதான் நாம் செய்ய வேண்டும்-

கேள்வி:- பயம்பாதுகாப்பின்மை காரணமாகதமிழ்த் தோட்டத்தொழிலாளர்கள் இந்தியாவுக்கோ அல்லது யாழ்ப்பாணத்துக்கோ குடிபெயர்ந்து சென்றால் அவர்களிலேயே முற்றுமுழுதாகத் தங்கியுள்ளதேயிலைத் தோட்டங்களை எவ்வாறு கொண்டு நடத்துவீர்கள்?

ஜே.ஆர்:- இலங்கைப்பிரஜையல்லாதவர்கள் திரும்பிப்போகலாம்-

கேள்வி:-இங்கு ஐந்து தலைமுறையாக வாழ்ந்தவர்கள் கூடவா?

ஜே.ஆர்:- ஆம் அவர்கள் வெளியேற வேண்டியது தான்-

கேள்வி:- அமெரிக்காவில் ஒரு குழந்தை அமெரிக்க மண்ணிலே பிறந்தால் அக்குழந்தைக்கும், அக்குழந்தையின் தாய்க்கும், அமெரிக்கப் பிரஜாவுரிமை வழங்கப்படுகிறதே!

ஜே.ஆர்:- அங்கு அப்படியிருக்கலாம் ஆனால் இங்கு நாம் வேறுவிதமான குடியுரிமைச் சட்டங்களை வைத்திருக்கிறோம்-

கேள்வி:- தனி நாட்டுக்குப் போராடத் தமக்கு மக்கள் ஆணை தந்திருப்பதாகத் தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு.அ.அமிர்தலிங்கம் கூறுகிறார். மாற்றுத் திட்டங்களைமுன்வைக்க வேண்டியது உங்கள் அரசின் பொறுப்பு என்றும் அப்படி வைத்தால் அதுபற்றி ஆராயப்படும் என்றும் அவர் கூறுகிறாரே’

ஜே.ஆர்:- எமது எல்லா ஆலோசனைகளும் திட்டங்களும் இப்போது அமுல்படுத்தப்படுகின்றன-

கேள்வி:- தமிழர் விடுதலைக் கூட்டணியைத் தடை செய்யத் திட்டமிடுகிறீர்களா?

ஜே.ஆர்:- தமிழர் விடுதலைக் கூட்டணியை அல்ல— ஆனால் தமிழ் நாட்டில் இப்போது இயங்கும் ஈழக்குழுவைத் தடை செய்யப்போகிறேன்.

கேள்வி:- ஆனால் ஈழம் பற்றிப் பேசுவது ஏற்கெனவே சட்டவிரோதமில்லையா?

ஜே.ஆர்:- அரசியலமைப்பின்கீழ்அப்படித்தான்என்று நினைக்கிறேன்; ஆனால் உண்மையில் இவைபற்றி நாம் பாரதூரமாகக் கருதவில்லை.

கேள்வி:- இப்போது நீங்கள் ஈழம் பற்றிய பேச்சைத் தடைசெய்யப் போகிறீர்களா அல்லது ஈழம் குறித்துப் பேசுவோரை அழித்துவிடப் போகிறீர்களா?

ஜே.ஆர்:- அதுபற்றிநான் சிந்திக்கவேயில்லை. நான் அவர்களின் மனச்சாட்சியை அபிவிருத்தி செய்ய முனைகிறேன். அது இப்போதுதான் ஆரம்பமாகியுள்ளது.

கேள்வி:- அண்மையில் இங்கு இடம்பெற்ற வன்முறைக் கலவரங்களின் போது திருமதி காந்தி உங்களுடன் தொடர்பு கொண்டாரா?

ஜே.ஆர்:- இல்லை—இந்தியாவில் வகுப்புக்கலவரம் நடைபெறும் போது நான் அவருக்கு எழுதுவதில்லை, இந்தியாவில்தான் அடிக்கடி இனக்கலவரம் நடைபெறுகிறது-

கேள்வி:- இந்திரா காந்திக்கும், இங்குள்ள தமிழர்களுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கும் என்று நீங்கள் கருதுகிறீர்களா? இப்பிரச்சினையில் திருமதி காந்தி மத்தியஸ்தம் வகிக்க முடியுமா?

ஜே.ஆர்:- அவ்வாறுநான் கருதவில்லை.

கேள்வி:- இப்பிரச்சினையில் திருமதி காந்தி ஏற்க வேண்டிய பொறுப்பு எதுவும் இல்லையென்று கூறுகிறீர்கள்?

ஜே. ஆர்:- சிறீலங்காவைச் சேர்ந்தோரைத்தவிர வேறு எவருக்கும் இப்பிரச்சினையில் தலையிட உரிமை கிடையாது. அவர்எவ்வகையில் உதவமுடியும்?

கேள்வி:- உதாரணமாக தனிநாட்டுப் பிரச்சினையில் உங்களை அதிகம் நெருக்க வேண்டாம் என்றும், உங்களுடன் உட்கார்ந்து அமைதியாகப் பேசி பிரச்சினையைத் தீர்க்கும் படி திருமதிகாந்தி தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர்களுக்கு ஆலோசனை கூறலாம் அல்லவா?

ஜே.ஆர்:- ஓ, நிச்சயமாக அது பயனுள்ளதாக அமையும்- ஆனால் இதுபற்றி நான் அவரிடம் கோரியதில்லை.

கே: தனதுசொந்தமுயற்சியாகதிருமதிகாந்திஉதவிக்கு வந்தால்,அதை நீங்கள் தலையீடு என்றோ, அல்லது வேறு விதமாகவோ கருதமாட்டீர்களா?

ஜே.ஆர்:- அவவின்வேண்டுகோளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியார் காது கொடுப்பார்கள் என்றுநான் நினைக்கவில்லை-

கேள்வி:. இப்பிரச்சினையை எப்படியாவது தீர்த்து வைக்கும்முயற்சியாக,தமது நண்பரான திமுக தலைவர் கருணாநிதியிடம் ஈழக்கோரிக்கையை உற்சாகப்படுத்த வேண்டாம் என்றும் தமிழர் பிரச்சினைக்கு சமாதானவழி மூலம் நல்ல தீர்வு காண முயற்சிக்கும்படியும் தமது நிலையிலிருந்து திருமதிகாந்தி வேண்டுகோள் விடுத்தால். நான் நம்புகிறேன் நிச்சயமாக.........”

ஜே.ஆர்:-ஆமாம்,ஆமாம். அது மிகப் பெரிய உதவியாக அமையும்.

---


# சுடர்

## ஆடி—ஆவணிஇதழ்வெளிவந்துவிட்டது

பல்சுவை கருத்துக் குவியல்களுடன் சிறு கதைகள் - கவிதைகள்—அரிய பல தகவல்கள்அனைத்தையும் தாங்கி வெளி வந்துள்ளது.

**படிக்கத் தவறாதீர்கள்!**

பிரதி ஒன்றின் விலை ரூபா: 2.00
ஒரு வருட சந்தா ரூபா: 25-00

நிர்வாகி
சிலோன் நியூஸ் பேப்பர் லிமிட்டட்
194 ஏ, பண்டார நாயக்க வீதி
கொழும்—12


---

## ‘நடந்து முடிந்த கொலை, தீ வைப்பு கற்பழிப்பு வன்முறைகளை தூண்டிவிட்டது ஐ.தே.க.வினர் சிலரது பொறுப்பற்ற உரைகளே’

—ஜனாதிபதி

---

## • President chastises MPs who encouraged arson, rape and murder

By Kenneth Amerasekera

**President J. R. Jayewardene yesterday accused some Government MPs of speaking, both in Parliament and outside, words that encouraged violence and the murders, rapes and arson that have been committed.**

If leaders of his United National Party could not set an example to the rest of the country, "it is better for me to retire from the leadership and let those who believe that the harming of innocent people and property, that has happened recently, is the way to solve tre problems that face this multi racial, multi religious and multi caste society, take over the leadership", President Jayewardene told the UNP's All Island Executive Committee at the Ramakrishna Hall in Wellawatte yesterday.

President Jayewardene was alluding to the spate of recent incidents in a hard hitting speech to the 1,500 strong membership from all parts of Sri Lanka. He rend out English and Sinhala texts of the prepared speech and then announced that the meeting was over.

Here is the full text of the speech by President Jayewardene:—

"I speak more in sorrow than in anger. Recent events throughout the country, North, Centre and South show that the religions we profess do not seem to have influence for the good of some of our people.

"I regret that some members of my party have spoken in Parliament and outside, words that encourage violence and the murders, rapes and arson that have been committed.

"How many of our party leaders throughout the country have spoken against the recent acts of violence? What is the example we as leaders of the governing party are setting to our followers and to the rest of our countrymen?

"I must have reasons to be proud of the party which I am Leader. If I cannot, it is better for me to retire from the leadership of this party and let those who believe that the harming of innocent people and property that has happened recently is the way to solve the problem that face this multi-racial, multi-religious and multi-caste society, take over the leadership of the party.

"Please consider what I have said seriously, because it is not only our individual selves, not only our party but the whole nation and the welfare of its future citizens that are involved in the way we act and speak today."

SUN Saturday September 5 1981

# தலைமைப் பதவியை விரும்பாத தலைவர் தந்தை செல்வா!



1981ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம்நினைவுச் சொற்பொழிவை யாழ்ப்பாண வீரசிங்க மண்டபத்தில் பேராசிரியர் அ.ஜெயரத்தினம் வில்சன் நிகழ்த்தினர். ''எஸ்.ஜே.வி. செல்வநாயகம்அவர்களின்வரலாற்றுத் திருப்பகாலத் தலைமை பற்றி நினைவிலிருந்து ஒரு படப்பிடிப்பு'' என்ற தலையங்கத்தில் திரு. வில்சன் ஆற்றிய உரையின் மூன்ருவது பகுதி இங்கு இடம் பெறுகிறது. —ஆர்

திரு. செல்வநாயகம் தமிழ்த்தேசிய இயக்கத்தின் தலைமையை ஏற்க விருப்பமற்ற வேட்பாளராகவே இருந்தார்என்பதற்குமூன்று சான்றுகளை நான் அறிந்திருக்கிறேன்-

ஒருமுறை எனதுமுன்னிலையில் சேர் எட்வேர்ட் திரு. செல்வநாயகம் தமிழர் போராட்டத்தில் மேற்கொண்ட கணக்கற்ற அனுவசியமான தியாகங்களுக்காகஅவரைக்கடிந்துகொண்டார், அப்போது அவரது கண்டனத்திற்குப் பதிலளித்த திரு, செல்வா தமிழர் இயக்கத்தின் தலைமையை ஏற்கும் எண்ணம் தமக்கு இல்லையென்றும் திரு.ஜீ.ஜீ-பொன்னம்பலமே அப்பதவியில் தொடர்ந்தும்இருந்து வருவார் எனத் தாம்நம்புவதாகவும் கூறினர்-

1948இல் திரு: ஜீ:ஜீ,திரு டீ.எஸ், சேன நாயக்காவின் அரசில் சேர்ந்த போது வேருெருவர் அவரது பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமெனத் திரு. செல்வா, [illegible]சேர்,எட்வேட்டுடன்பேசிய [illegible]ாதுவலியுறுத்தினர். சூழ்[illegible]லையால் பொறுப்புதம்மீது [illegible]த்தப்பட்டதாக அவர் [illegible]றினர்,

[illegible]953ஆம் ஆண்டு அவ[illegible]ரைப் பார்க்கின்சன்ஸ் [illegible] வந்தது. நோய்கடு[illegible]யாக வருத்திய[illegible]ல் அவர் தீவிர [illegible]சியலிலிருந்து ஒதுங்கி[illegible]த் தீர்மானித்தார். அப்[illegible]பாது திரு,எஸ்:நடேசனுக்[illegible]கெதிராக அவர் தேர்தல் ஆட்சேப வழக்குப் பதிவு செய்திருந்தார். வழக்கில் வெற்றிகிடைத்ததும் கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த திரு. கு. வன்னியசிங்கம் அவர்களிடம்இயக்கப் பொறுப்புக்களைஒப்படைக்கஅவர்விரும்பினர்;

விதியோ வேறு விதமாக முடிவு செய்தது. நீதியரசர் கே.டீ.த. சில்வா அவரை மீண்டும் தமிழியக்கத்தில் இணைத்துவிட்டார்,

திரு.கே.டீ.த, சில்வா திரு. நடேசனுக்குச் சார்பாக தீர்ப்பு வழங்கினர், இதனுல் திரு- செல்வாவின் ஆதரவாளர்களின் மான உணர்வு தூண்டப்பட்டது- கற்றுவல்ல நீதிபதியின் தீர்ப்புக் குறித்து அவர்கள் கோபமுற்றனர், திரு. செல்வா திரு, நடேசனுக்கு 90,000 ரூபா செலவு தொகை வழங்க வேண்டுமென திரு. சில்வா தீர்ப்பளித்ததனுல் செல்வா பொருளாதார நெருக்கடிக்குள்ளானர்.

1953இல் 90,000 ரூபா மிகப் பெருந்தொகையாகும்- திரு- செல்வாவின் நண்பர் திரு- எட்வேட்ஜயதிலகா அவருக்குக் கடன் வழங்கி உதவினர். மூர்க்கத்தனமான நீதிவழங்கப்பட்ட இக்காலகட்டத்தில் செல்வா தமிழர் இயக்கத்தின் தலைமைப் பதவியில் தொடர்ந்தும் இருக்கவேண்டுமென அவரதுதீவிரஆதரவாளர்கள் வற்புறுத்திநின்ருர்கள்.

திரு. செல்வாமீது வீழ்ந்த தலைமைப் பொறுப்பு அவர் விரும்பியிருந்த ஒன்றல்ல என்பதை அறியும் வாய்ப்பு அவரோடு உரையாடிய போது ஏற்பட்டது.

திரு. வன்னியசிங்கம் மறைந்த சிலநாட்களின்பின் அரசியலில் அவரது (செல்வாவின்) வாரிசாக யார்வருவார்என வினவினேன்.அவர் நேரடியாக எனக்குப் பதிலளிக்கவில்லை. திரு. பொன்னம்பலத்தை பிரதமர் டீ, எஸ், சேனநாயக்கா அமைச்சராக்கியபோது தம்மைப் போன்ற தீவிரமற்ற சாந்தமான ஒருவர் போர்க்குணமும் தீவிரமும் கொண்ட பொன்னம்பலத்துக்குப் பதிலாகத் தலைமைப் பதவியை ஏற்பார் எனத் தமிழர் பலரும் எண்ணியிருக்கவில்லை; ஆனுல்இறுதியில்தாம் வேறு வகைப்பட்ட தலைமையை வழங்கியதாக அவர் கூறினர்.

அதேபோல தாம் அரசியல் வானிலிருந்து விலகும் போது காலம்ஒரு தலைவரை உருவாக்கும் என அவர்கூறினர். கூச்சமுள்ளவராகவும் அதிகம் பேசாதவராகவும் இருந்த செல்வா தமிழர் தேசிய இயக்கத்தின் தலைமைப் பதவிக்காக என்றும் தீவிரமாகப் போட்டியிட்டது கிடையாது.

திரு. பொன்னம்பலம் (தமிழர் தேசிய இயக்கத்திலிருந்து) விலகிச் சென்ற போது ஒருவெற்றிடம் ஏற்பட்டிருப்பதைச் செல்வா உணர்ந்தார்.நான் முன்பே கூறியபடி தெய்வீக அருள் வழிப்பட்ட தலைவராகஅவர் உருவானர்.தவிர்க்க முடியாது தலையிடல் என்ற நிர்ப்பந்தம் அவரைத் தலையிடச் செய்தது.

ஒருமுறை எனது சிங்கள நண்பர் ஒருவர் யாழ்ப்பாண மனிதன் மிகவும் விவேகி; அவனை எந்த அரசியல் வாதியும் ஏமாற்ற முடியாது தமது நன்மைகளைக் கவனித்துக்கொள்ள அவர்களுக்குத் தெரியும் என்று கூறியதாக நான் செல்வாவிடம் கூறினேன்,அப்போது அவர் அளித்தபதில்தவிர்க்க முடியாது தலையிடல் என்ற தத்துவத்திற்குச் சான்ருக அமைந்தது.

''தமிழ் மக்கள் தவருக வழி நடத்தப்பட்டுவிட்டார்கள். அவர்கள்அவர்களையறியாமலே தமது குடித்தொகையின் முக்கிய பகுதியின் குடியுரிமைப் பறிப்புக்கு உடந்தையாக இருந்து விட்டார்கள் (சனநாயகம்தொகையை அடிப்படையாகக் கொண்டது),' என அவர் கூறினர்.

தமிழ் மக்கள் அறியாமையால் தமது மரபுவழித்தாயகத்தில் சிங்கள அரசுகள் குடியேற்றம்நடத்த அனுமதித்துவிட்டனர் எனவும் அவர்கூறினர்மீண்டும்அவர்கள் தவருக வழி நடத்தப்படலாம் என்றுஅவர் அஞ்சினர், மீண்டும் இது நடவாது தடைசெய்வதேதமது பணி என அவர் உணர்ந்தார்,

இருபத் தோராண்டுகள் தமிழினத்தின் தலைமைப் பதவியை அணிசெய்த திரு. செல்வநாயகம் பத்து மாபெரும் எதிர்ப்பு இயக்கங்களை நடத்தினர். அரசியல் நெருக்கடி ஏற்பட்டபோது துணிவுமிக்கதும் புதுப்புனைவானதுமான நடவடிக்கைகள் மூலம் அவர் அவற்றில் தலையிட்டார்,

மக்கள் இயக்கம் எந்தத் திசையில் செல்ல வேண்டுமென்று தலைவர் நினைக்கிருரோ அந்தவகையில்அதனை உருவாக்கி நெறிப்படுத்தினர். உரிய நேரத்தில் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொண்டு உளவியல் ரீதியான தாக்கத்தை ஏற்படுத்தி அரசுகளைச் சிந்திக்க வைத்தார்.

1956முதல் 1977 வரை தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விளங்கியபோது தலைமைதாங்கும்வீரராக அவர் செயற்பட்டார் திரு,செல்வநாயகத்தின்செல்நெறியிற் சென்ற வேறு எந்தத்தலைவரும் குறுகியகாலத்தில் அவரைப்போற் சாதனை புரிந்ததில்லை எனலாம்.

மாபெரும் மகாத்மா காந்தியடிகள்கூட 21 ஆண்டுக்காலத்தில் இந்தியாவை ஆண்ட பிரித்தானியருக்கெதிராக மூன்று போராட்டங்களையே நடத்தினர், 1921இல் இடம் பெற்ற ரௌலட் சத்தியாக்கிரகம் 1930இல் நிகழ்த்தியஉப்புச் சத்தியாக்கிரகம் 1942இல் நடைபெற்ற ஆவணிச்சத்தியாக்கிரகம் எனபன அவை-

திரு. செல்வாவின் சாதனைகளோ பலவாகவும்பலதரப்பட்டவையாகவும்இருந்தன

முதலாவதாக 1956இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தாம் தலைமைதாங்கிய தேசிய இனத்தின்இலங்கைத் தமிழரசுக் கட்சியை (கூட்டாட்சிக் கட்சி) இனத்துக்குத் தலைமை தாங்கும் கட்சியாக உருவாகி மிளிரச் செய்தார்.

இரண்டாவதாக திரு. எஸ். டபிள்யூ. ஆர், டீ பண்டாரநாயகாவின் மக்கள் ஐக்கிய முன்னணி (எம்,ஈ.பீ) அரசின் சிங்களம் மட்டும் சட்டத்திற்கு எதிராக1956 யூன் 5ஆம் திகதி தாமே தலைமைதாங்கிக்(கொழும்பு) காலிமுகத்திடலில்ஒருசத்தியாக்கிரகப் போரை நடத்தினர். இந்த எதிர்ப்பு நடவடிக்கை ஸ்ரீலங்கா எங்கும் எதிரொலித்துப் பல்வேறு மட்டங்களிற் பல விளைவுகளைஏற்படுத்தியது.பண்டாரநாயக்கா அரசின் ஒரு மொழிக்கொள்கையை விட்டுவிடும்படிஎச்சரிக்கும்செயலாக இது அமைந்தது.

மூன்ருவதாக 1956யூலை—ஒகஸ்ற் மாதங்களில் வரலாற்றுப் பெருமைமிக்க திருமலை வழிநடைச் செலவை இலங்கைத் தமிழரசுக் கட்சி தலைவர் என்ற வகையில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்தார். திருமலை யாத்திரையின் முடிவில் 1956 ஒகஸ்ற் 19ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற கட்சியின் மாநில மாநாட்டில் நான்கு முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன, 1957க்குப் பின் தமிழர் பிரச்சினை தொடர்பாகச் சிறிலங்கா அரசுகளோடு நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகள் அனைத்துக்கும் இதுவே இத்தீர்மானங்களே அடிப்படையாகஅமைந்தன.

நான்காவதாக 1957யூலை மாதத்தில் திரு, செல்வநாயகம் பண்டாரநாயக்காவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் குறிப்பிடலாம் இந்த ஒப்பந்தம் திருமலைத் தீர்மானத்தின் அடிப்படையில் அமைந்தது.

பண்டா— செல்வா ஒப்பந்தம் நாட்டினம் ஒன்றை உருவாக்கும் மூன்று முக்கிய தத்துவங்களை ஏற்றுக் கொண்டது.வடக்கு.கிழக்கு மாநிலங்கள் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித் தாயகம் என்பத இவ்வொப்பந்தம் ஏற்றுக் கொண்டது,

தமிழ் மொழி சிறீலங்காவின் தேசிய சிறுபான்மையினரின் மொழி என்பதும்ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மூன்ருவதாக வடக்கு, கிழக்கு மாநிலங்களுக்குப் பிரதேச சுயாட்சி வழங்கப்படவேண்டுமென்பதும் அவ்வொப்பந்தத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

திரு. செல்வநாயகம் இவ்வொப்பந்தத்தைத் தமது நெருங்கியநண்பரும்இராணி வழக்கறிஞரான திரு.எச்.வி. பெரேரா அவர்களுக்குக் காட்டியபோது அவர், திரு, செல்வா அவ்வொப்பந்தத்தின்மூலம் எதனையும்விட்டுக் கொடுத்து விடவில்லை என்று பாராட்டினர்- ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கக் கூடிய அவ்வொப்பந்தத்தை அரசு கௌரவித்து நடைமுறைப்படுத்தவில்லை.

தம்மோடு செய்து கொண்ட ஒப்பந்தத்தை நடைமுறைக்குக் கொண்டுவரக் கூடிய சட்ட விதிகளை ஆக்குவதற்கான ஆதரவு பிரதமருக்கு இல்லை என்பதைத் திரு, செல்வா படிப்படியாக உணர்ந்தார். எனவே 1958 மார்ச்,ஏப்பிரல்மாதங்களில் சிங்களம் மட்டும் சட்டத்தின் திணிப்புக்கு எதிரான போராட்டத்தைத் தமது ஐந்தாவதுஇயக்கமாகஆரம்பித்தார்-

(ஒப்பந்தத்துக்கு முரணுக) வடக்கு, கிழக்கு மாநிலங்களுக்கு அரசு [சிங்கள] சிறீ பொறித்த இலக்கத் தகடுகளைக் கொண்ட பேருந்துகளை அனுப்பியது, இப்பேருந்துகள்வந்தபோது செல்வாவும் அவரது தமிழரசுக் கட்சியினருமே எதிர்ப்பு அணியில் முன்னணியில் நின்றனர். சிங்கள எழுத்தின் மீது கருந்தார் பூசி விட்டுத் தமிழ் எழுத்துக்களை இலக்கத் தகடுகளில் பொறித்தனர்- சிங்களவர் வாழும் தென்னிலங்கையில் இதனுல் பெருங் கொந்தளிப்பு ஏற்பட்டது.

அஞ்சி நடுங்கிய பிரதமர் (பண்டார நாயக்கா) 1958 மே மாதத்தில்அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனம் செய்து அரசுபொறுப்புக்கள் அனைத்தையும் அப்போது ஆளுநராக இருந்த சேர் ஒலிவர் குணதிலகாவிடம் கையளித்தார்.

அவசரகாலச்சட்டத்தைப் பயன்படுத்தி திரு, செல்வநாயகம் உட்படத் தமிழரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர், சிங்கள சிறீப் பேருந்துகளுக்கு எதிராகச் சட்ட மறுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட திரு. செல்வாமட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் குற்றவாளியாகக் காணப்பட்டார். ஒரு வாரகாலம் அவருக்குச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. நோயுற்று மெலிந்து நலிந்த நிலையிலும் இன விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்று மீண்ட செம்மல் செல்வாவை வரவேற்கமட்டக்களப்பு முழுவதுமே விழாக் கோலம் பூண்டது; மக்கள் அனைவரும் நகரில் வரவேற்கத் திரண்டனர்.

பேராசிரியர்
அ, ஜெயரத்தினம்
வில்சன்

# தமிழ் மக்கள் மீது திட்டமிட்டுத் தாக்குதல் மேற் கொள்ளப்பட்டது!

## தமிழக கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

இலங்கையில் சமீபத்தில் தமிழ் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட தாக்குதல் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒன்றெனவும், பிற்போக்கு சக்திகளின் பின்னணி உதவியுடன் இது நிறைவேற்றப்பட்டதாகவும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினரின் உயிரையும் உடமைகளையும் பாதுகாக்க வேண்டியது இந்திய அரசாங்கத்தின் ஆத்மீகக் கடமையாகுமெனவும் இந்தவிடயத்தில் இந்திய அரசு தலையிட வேண்டுமெனவும் அக்கட்சி கோரியுள்ளது.

தமிழகக்கம்யூனிஸ்ட்கட்சியின் நிர்வாகச் சபைக் கூட்டம் மூன்று நாட்கள் தொடர்ச்சியாகநடைபெற்ற பின் கடந்தவெள்ளிக்கிழமை முடிவடைந்தது, இக்கூட்டத் தொடரிலேயே மேற்படி கண்டனங்களும் முடிவுகளும் எடுக்கப்பட்டன.

இலங்கைத் தீவில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணவும் சமாதானத்தை நிலைநாட்டவும் வழிவகையொன்றைக் காணுமாறு கொடுங்கோன்மை எதிர்ப்பு, ஜனநாயகா சக்திகளை நிர்வாக சபை கோரியுள்ளது.

இலங்கையில்தமிழ்மக்கள் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல்களைக் கண்டிக்குமாறும், பாதிக்கப்பட்ட இலங்கைமக்களுக்கு உதவ முன்வருமாறும் தமிழக மக்களை மற்றொரு தீர்மானம் வேண்டியுள்ளது.

## நவக்கிரி வாத்தகர் மீது ராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம்

சிவிலுடையில் காணப்பட்ட ஒரு இராணுவச் சிப்பாயை. திருடன் என்று தவறுதலாகக் கருதி அச்சிப்பாயின் தலையில் தாக்கியதாகக் கூறப்படும் கோப்பாய்த் தொகுதியிலுள்ள நவக்கிரி என்னுமிடத்தைச் சேர்ந்த வர்த்தகரான நாகலிங்கம் இராசையாவை, இராணுவச்சிப்பாய் றிவோல்வரால் திருப்பிச் சுட்டதாகவும் இராசையா சுவரைத்தாண்டிக்குதித்து ஓட முயற்சிக்கும்போது மற்றோர் இராணுவச் சிப்பாய் சப்மெசின் துப்பாக்கியால் சுட்டதாகவும் தெரியவருகிறது.

இதனுல் வயிற்றிலும் கையிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயமடைந்த மேற்படி நபரான இராசையாவை இராணுவத்தினர் கைது செய்து யாழ்மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்- இவருக்கு அவசரசத்திர சிகிச்சைசெய்யப்பட்டது- இராசையா, பிரக்ஞை இழந்திருப்பதால் அவரிடமிருந்துவாக்குமூலம் எதையும் பெற முடியவில்லையென்றுபொலீசார்கூறினர்.

(டெயிலி நியூஸ் 5-9.81)

## இந்திய நாடாளு..-

—1ம்- பக்கத் தொடர்

செய்வதற்காகக்கூடும்அதே தினத்தில், இலங்கைத் தமிழர்கள் மீது நடத்தப்பட்டு வரும் கொடுமைச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கோரி இந்திய மத்திய அரசை வற்புறுத்துமுகமாக அனைத்துலகத் தமிழர் பேரவையினர் இந்திய நாடாளுமன்றக்கட்டடம் முன்புமறியல்இயக்கம் ஒன்றைநடத்தவிருக்கிறது-

இத்தகவலை இந்த இயக்கத்தின் பொதுச் செயலாளரான, திரு.தமிழ் மன்னன் வெளியிட்டுள்ளார். இந்த மறியல் போராட்டத்தில் சுமார் 50பேர் பங்கு பற்றுவார்கள் என்றும்அவர் அறிவித்துள்ளார்.

சகல அரசியற்கட்சிகளின் தலைவர்களையும் தாம் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும்உடமைக்கும் பாதுகாப்பு அளிக்க இந்திய அரசு நடவடிக்கையெடுக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தப்போவதாகவும் திரு. தமிழ் மன்னன் கூறியுள்ளார்,

## சென்னையில் கொடும்பாவி எரிப்பு

ஸ்ரீலங்காவின் பெருந் தலைவர் ஒருவருடைய கொடும்பாவியொன்று சென்னையில் 6-9-81 இல்எரிக்கப்பட்டது. இலங்கைத்தமிழமீது வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டதை ஆட்சேபித்தேஇச்சம்பவம் நடைபெற்றது. இதையொட்டி. உலகத் தமிழர் பேரவை செயலாளர் திரு. தமிழ் மன்னன் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

மதுரையிலும் இலங்கைத் தமிழர்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து மதுரை கலெக்டர்அலுவலகம்முன்பு கல்லூரி மாணவர்கள் ஆயிரம் பேர் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர், முடிவில் சிறீலங்கா பெருந் தலைவர் ஒருவரின் கொடும்பாவினை மாணவர்கள் எரித்தனர்.

## உள்நாட்டுப் பிரச்...

—1ம்- பக்கத் தொடர்

நாட்டுக்குச் சென்றிருந்த அமைச்சர் திரு, எஸ். தொண்டமான் இலங்கைத் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவதைஎதிர்த்து தமிழ் நாட்டில் கட்சிபேதமின்றிப் பொங்கியெழுந்துள்ள இன உணர்வைத்தணிக்கும் செயலில் ஈடுபட்டார்.

தமிழக அரசும் தமிழ் நாட்டின் அனைத்துக்கட்சிகளும்12-9-81 சனிக்கிழமை நடத்தவிருக்கும் ஹர்த்தாலை கைவிடச் செய்யும் தோரணையில், ''ஹர்த்தால் நடத்தி என்னபயன்? அதற்குப்பதிலாக தமிழகத்தின் 4கோடிமக்களும் 25 காசு வீதம் பாதிக்கப்பட்டஇலங்கைத் தமிழருக்கு உதவி செய்யலாமே — அப்படிச் செய்தால் ஒருகோடி ரூபா கிடைக்கும்''என்று தமிழக அரசின் ஹர்த்தால்முடிவை கிண்டல் செய்யும் பாணியில் பத்திரிகைகளுக்கு திரு, தொண்டமான் பேட்டியளித்தார்.

அத்துடன் இலங்கையில் சகஜநிலை திரும்பிவிட்டதாகவும்இப்போது தமிழர்களுக்கு இலங்கையில் அபாயம் இல்லையென்றும் சிறீலங்காவில்நடைபெற்றகலவரங்களுக்கு சில சிங்களத் தீவிரவாதிகளே காரணமென்றும் கலவரத்தில் சுமார் பத்து தமிழர்கள் இறந்திருப்பதாகவும் தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் சிறீலங்காச் சம்பவங்களை மிகைப்படுத்தி எழுதுவதாகவும் இலங்கையில் தனிநாடு நிறுவுவதால் தமிழர்பிரச்சினைதீராது என்றும் திரு: தொண்டமான் தினமணி (மதுரைப் பதிப்பு) 4.9.81 இதழுக்கு அளித்த பேட்டியில் கூறியிருந்தார்;

## எம். ஜி. ஆர். சூடு!

திரு. தொண்டமானின் மேற்படி கூற்றுக்கு தமிழக முதலமைச்சர் திரு- எம்-ஜி, ஆர். சுடச்சுடப் பதிலளித்தார். அவர் கூறியதாவது,.

''பொறுப்பு வாய்ந்த அமைச்சரான திரு-தொண்டமான் இதுபோன்றஆலோசனைகளை தமது அரசாங்கத்திடம் கூறியிருக்கலாமே அவர்இங்குவந்து அவ்விதம் கூறியிருக்கக்கூடாது.

தவிரவும் இலங்கைத் தமிழர் பிரச்சினை அந்நாட்டின் உள்விவகாரமல்ல—அது உலகப்பிரச்சினையாகஇன்று உருவெடுத்துவிட்டது. இலங்கைவாழ் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் தலைவராக இருக்கும் தொண்டமான்அவர்களைப்பாதுகாக்க என்ன செய்தார்?'' என்று திரு.எம்- ஜி. ஆர்- கேட்டார்.

## கலைஞர்கருணாநிதி கேள்வி!

''வன்செயல்களினுல்பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களுக்கு உதவ முடியாத நிலையிலே இலங்கை அரசு இருக்கிறதுஎன்பதைத்தான் அமைச்சர் தொண்டமானின் கூற்றுப் புலப்படுத்துகிறது- இதைதிரு-தொண்டமான் வெளிப்படையாகச் சொல்லி நிதிகோரினுல் இந்தியத் தமிழர்கள் நிச்சயம் உதவிசெய்ய ஆயத்தமாக இருக்கின்றனர்''என்று திமுக தலைவர்கலைஞர் மூ, கருணாநிதி திரு, தொண்டமானுக்குப் பதிலளித்துள்ளார்.

## ஹர்த்தால்....

—1ம்- பக்கத் தொடர்

தமிழ் நாடு சட்டமன்றத்திலும்சட்டமேலவையிலும், இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான வன்முறையைக் கண்டித்தும், இதில் இந்திய அரசு தாமதமின்றி நடவடிக்கையெடுக்கவேண்டுமென்றும் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன்ஒருமனதாகத் தீர்மானம் எடுத்தோம்.

அத்தோடு செப்டம்பர்12 ஆம் திகதி தமிழ்நாடுமுழுவதும் ஹர்த்தால் அனுட்டிக்கவுள்ளோம். தமிழ்நாட் நாலரைக் கோடி மக் கவலையை இந்த ஹர்த் மத்திய அரசுக்கும், லங்கா அரசுக்கும், கும் வெளிப்படுத்து அமையும்.

இலங்கைத் தமிழர்க எதிராக இடம்பெற்ற மையை நிறுத்தி, அவர்க பிரச்சினையில் திருமதி இந்திரா காந்தி தலையிட்டு அதற்கு நல்லதோர்முடிவுகா திருமதி காந்தியின் கரங்களுக்குவலுவூட்டுவதே ஹர்த்தாலின் நோக்கம்என்றுதிரு. எம்.ஜி.ஆர். கூறியுள்ளார்.

ஜெயிட்டி 3-வது வாரம்
(கொட்டாஞ்சேனை)
தினசரி 3 காட்சிகள், சனி ஞாயிறு 4 காட்சிகள்
மயிர்க் கூச்செறியும் சம்பவங்கள் நிறைந்த படம்
"த இன்கிறடிபிள் மெல்டிங் மான்"
(ஆங்கிலப் படம்)
[18 வயதுக்குக் குறைந்தவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்]

செல்லமஹால் 9-வது வாரம்
(கொட்டாஞ்சேனை)
தினசரி 3 காட்சிகள்!
மக்கள் திலகம் எம். ஜி. ஆர். — கவர்ச்சிக் கன்னி லதா
எம். என். நம்பியார், பி. எஸ். வீரப்பா
மற்றும் பலர் நடித்த
பல்லாண்டு வாழ்க
(வண்ணப்படம்)

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டாரால், யாழ்ப்பாணம், மகாத்மா காந்தி வீதி, 15-ஆம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1981-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.